**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 105/2015**

**Deposition of P.W.** 6

Name : திரு.ரவீந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.12.2024

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். தற்போதுதிருவட்டாரில் வசித்து வருகிறேன். 16.09.2010ம் தேதிநான் தக்கலை காவல்நிலைய சிற்ளபபு சார்பு ஆய்வாளராக பணியில்இருந்த போது 15.30 மணிக்கு தக்கலை அரசு மருத்துவ மனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பாலையா என்பவரிடம் விசாரித்தேன். அவர்கொடுத்த மனுவை பெற்று அதன் தன்மைப்படி நிலைய குற்ற எண்.780/2010 பிரிவுகள் 341, 294(பி), 307 506(2) இ.த.ச படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல்ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளரிடம் புகார்தாரரை விசாரித்து மனு பெற்றதாக வாக்குமூலம் கொடுக்கவில்லை. கவால்நிலையத்திற்கும், நீதிமன்றத்திற்கும் இடையே 10 மீட்டர் தூரம் இருக்கும். கவால்நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு ஆவணத்தை அனுப்ப வேண்டுமென்றால் சுமார் 15 நிமிடத்தில் அனுப்பி விடலாம். அன்றையதினம் மாலை 06.20 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு கிடைத்துள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் சொல்லவில்லை. சம்பவ இடம் டாஸ்மார்க் பக்கம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரை படித்து பார்த்தேன். சம்பவம் டாஸ்மார்க் கடையிலிருந்து வெளியே வரும் போது நடந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்ட நேரம் மற்றும் தேதி குறிப்பிடப்படவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உடன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டேன். புகார்தாரரிடம் முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் வாங்கவில்லை. சொல்லக்கூடிய நாளில் சொன்னவிதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை அவசரமாக தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.